# சர்வதேச கராத்தே போட்டி தமிழக மாணவர்களுக்கு தங்கம்

**திருப்புவனம்,பிப்.28**

கோவாவில் நடந்த சர்வதேச கராத்தே போட்டியில் இந்தியா சார்பாக பங்கேற்ற தமிழக மாணவர்கள் தங்கம் குவித்து சாதனை படைத்துள்ளனர்.

கோவா வாஸ்கோடகாமா நகரில் 9வது இந்தோ&மலேசிய சர்வதேச கராத்தே சாம்பியன் போட்டிகள் நடந்தன. இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா உள்ளிட்ட 5 நாடுகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர். இதில் இந்தியா சார்பாக பங்கேற்ற 72 மாணவர்களில் 31 பேர் தங்கம் வென்றனர்.

அதில் தமிழகம் சார்பாக மதுரை, திருப்புவனம், லாடனேந்தல் பகுதி வேலம்மாள் கல்வி குழுமத்தைச் சேர்ந்த 13 மாணவர்கள் 8 தங்கம், 11 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்ளை வென்றுள்ளனர்.



கோவாவில் நடந்த சர்வதேச கராத்தே போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற வேலம்மாள் கல்வி குழும மாணவர்கள் குழு.

பதக்கங்கள் வென்று தமிழகம் திரும்பிய மாணவர்களை வேலம்மாள் கல்வி குழு தலைவர் முத்துராமலிங்கம், அகில இந்திய கோஜீ & ரியூ கராத்தே பள்ளி இந்திய பிரிவு தொழில்நுட்ப இயக்குனர்கள் ரென்சி சுரேஷ்குமார், ரென்சி வைரமணி, பயிற்சியாளர் சென்ராய் பாரத் உள்ளிட்டோர் வாழ்த்தினர்.